# அகல்விளக்கு அலங்காரத்துடன் மெட்ரோ

சென்னை, அக். 26–

தீபாவளி அலங்காரத் துடன், நேற்று முதல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

சென்னை, விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக் கப்படுகிறது. பண்டிகை நாட்களில், விழா தொடர் பான அலங்காரங்களு டன், மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுவதுண்டு.

தீபாவளியையொட்டி, 15 ரயில்களில், தீபாவளி அலங்காரங்கள் செய்யப் பட்டுள்ளன. தீபம் விளக்கு கள், வண்ண கோலங்களு டன், தீபாவளி வாழ்த்து தெரிவிக்கும் விதமாக, அலங்காரங்கள் செய்யப் பட்டுள்ளன.



■ மெட்ரோ ரயில்களில் அழகு சேர்க்கும் தீபாவளி அலங்காரம்.